RICHMOND TAMIL SANGAM

ஒற்றுமையே உயர்வு

கதம்பம்

அக்டோபர் 2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

இந்த இதழில்...

03 அறிவிப்பு மடல்

04 திரையும் இசையும்

05 கொலுவலம்

07 என் பார்வையில் அமெரிக்கா

11 சவாலே சமாளி!

14 கண்ணனின் வைர வரிகள்

15 முப்பெரும் விழா

18 நங்கை-மக்கள் கருத்து

23 கொலு

25 நன்றி உரை

(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)

இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்

MEN'S NIGHT OUT

முதன்
முறையாக

RETRO THEME

DEEP RUN RECREATION CENTER

NOV 03, 6:30 PM TO 9:30 PM

9910 RIDGEFIELD PARKWAY, HENRICO, VA 23233

*LIMITED SEATS ONLY

திரையும் இசையும் - சிவரஞ்சனி (பாகம் 1)

Arohanam: S R2 G2 P D2 S
Avarohanam: S D2 P G2 R2 S

இந்த 22 ஆம் மேளகர்த்தா ராகம் கரஹரப்ரியாவின் வம்சத்தில் வரும் ராகம்.

இது ஒரு தொன்மை வாய்ந்த ராகமாக இருப்பினும், கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் இந்த ராகத்தில் பாடல்கள் அமைத்ததாக குறிப்பு இல்லை. ராஜாஜி அவர்களின் **குறை ஒன்றும் இல்லை**, புரந்தர தாஸரின் **யமநெல்லி காணேன் எந்து**, பாபநாசம் சிவன் அவர்களின் **ஆண்டவன் அம்பே**, அன்னமாச்சார்யாவின் **அந்தர்யாமி** போன்ற பாடல்கள் பிரபலமானவை.

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த பாடல்களில் சில:

திரைப்படம்	பாடல்	இசையமைப்பாளர்
சிவகவி	சொப்பன வாழ்வில்	பாபநாசம் சிவன்
மஹாகவி காளிதாஸ்	காலத்தில் அழியாத	கே. வி. மஹாதேவன்
அன்பு சகோதரர்கள்	முத்துக்கு முத்தாக	
இருவர் உள்ளம்	இதய வீணை தூங்கும் போது	
வசந்த மாளிகை	கலை மகள் கைப்பொருளே	
தில்லானா மோகனாம்பாள்	நலந்தானா நலந்தானா	
ஆதி பராசக்தி	வருகவே வருகவே	
இது சத்தியம்	சரவண பொய்கையில்	விசுவநாதன்-ராமமூர்த்தி
பாலும் பழமும்	நான் பேச நினைப்பதெல்லாம்	
ஒளி விளக்கு	ஆண்டவனே உன்	எம். எஸ். விஸ்வநாதன்
மீனவ நண்பன்	தங்கத்தில் முகமெடுத்து	
சிறை	நான் பாடிக்கொண்டே இருப்பேன்	
எங்க மாமா	எல்லோரும் நலம் வாழ	

தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்

(சிறுகதை)

கொலுவலம்

எழுதியவர்: நாகு பரசு

"விஜி, சீக்கிரம் கிளம்பு", என்று அவசரப் படுத்தினாள் உஷா. தயாராகிக் கொண்டே "இரு வந்துட்டேன். சுபா வந்துட்டாளா" என்றாள் விஜி. "நான் வந்து அரைமணி ஆச்சு, மகாராணி", என்று சுபாவிடம் இருந்து குரல் வந்தது.

மூன்று தோழிகளும் சுந்தரி மாமி வீட்டு முன்னால் வந்து காரை நிறுத்தினார்கள். இறங்கி போகும்போது விஜி நிற்கும் கார்களை கவனித்தாள். "உஷா, அது அனுஜ்ஜின் கார்தானே"? எனக்குத் தெரியாது என்று மழுப்பினாள் உஷா.

மூவரும் உள்ளே நுழைந்தனர். ஏகக்கூட்டம். கொலு பார்க்க நிறைய பேர் வந்திருந்தார்கள். வாங்க, வாங்க என்று வரவேற்றார் சுந்தரி. இந்த தடவை எந்த எந்த பொம்மை புதுசு சொல்லுங்க பாக்கலாம். ஆனந்த் சரியா சொல்லிட்டான், நீங்க சொல்றீங்களா பார்ப்போம் என்று உசுப்பேத்தினார். ஆனந்த் வந்தாச்சா என்றாள் விஜி. அவங்க மூணு பேரும் வந்து நேரமாச்சு. அவங்க கிளம்பறாங்களாம். இருங்க அனுப்பிட்டு வரேன் என்று நகர்ந்தார் சுந்தரி.

இவனுங்க எப்போல இருந்து கொலுவெல்லாம் வரானுங்க என்றாள் சுபா. அவர்கள் ஜன்னல் வழியாக ஆனந்தும், கண்ணனும் அனுஜ்ஜின் காரில் ஏறியதைப் பார்த்தார்கள். ஏன், நாமெல்லாம் வரும்போது அவங்க கொலு பாக்க வரக்கூடாதா என்றாள் விஜி.

கொலு பார்த்துவிட்டு சுண்டல் சாப்பிட்டுவிட்டு மூவரும் கிளம்பி மைதிலி மாமி வீட்டு கொலுவுக்கு போனார்கள். "என்னடி உஷா, இங்கயும் அனுஜ் கார் இருக்கு?" என்றாள் விஜி. "நீ ஏன் எந்த கார் நிக்குதுன்னு எல்லாம் பாத்துட்டு இருக்க", என்று பாய்ந்தாள் உஷா.

வாங்க, வாங்க என்று வரவேற்றார், மைதிலி மாமியின் கணவர். உள்ளே மறுபடியும் அந்த மூவரையும் பார்த்து மேலுக்கு கோபம் காட்டி உள்ளூர மகிழ்ந்தனர் இந்த மூவரும். என்னடா பசங்களா, இந்தப் பொண்ணுங்கள துரத்தறீங்களா என்று கிண்டல் செய்தார் மாமா. எனக்கென்னவோ அவங்கதான் எங்கள துரத்தறாங்கன்னு தோணுது மாமா என்றான் கண்ணன். சுபாவுக்கு சட்டென கோபம் தலைக்கேறியது. ஆமாம் எங்களுக்கு வேற வேலை இல்லையா என்றாள்.

சரி மாமா, நாங்க கிளம்பறோம் என்று அந்த மூன்று நண்பர்களும் கிளம்பினார்கள்.

இதே கதை அடுத்த இரண்டு வீடுகளிலும் தொடர்ந்தது. "என்னடி, எங்க போனாலும் இவனுங்க பின்னாடியே வராங்க", என்று அலுத்துக் கொண்டாள் உஷா. "அவனுங்கள கேட்டா நாமதான் அவங்க பின்னாடி போறோம்னு சொல்லுவாங்கடி. பாத்தா அப்படித்தானே தெரியுது", என்றாள் விஜி. "அது எப்படி அவனுங்களுக்கு தெரியுது நாம் போற இடத்துக்கெல்லாம் போய் நிக்கறாங்க", என்றாள் சுபா.

"நீ போட்ட ஆப்டிமல் ரூட் அவனுங்களும் போட்டானுங்க போலிருக்கு", என்றாள் உஷா. "விட்டா நமக்கே ரூட் போடுவானுங்க, போதும்யா வீட்டுக்குப் போகலாம்", என்றாள் சுபா. "அவங்க இருக்கற இடம் வேற, நாம இருக்கற இடம் வேற. அது எப்படி அவங்களுக்கு ஆப்டிமல் ரூட் ஆகும்", என்று ஆராய்ச்சியில் இறங்கினாள் சுபா. "ஆமாம் இந்த ஜேம்ஸ் ரிவரை சுத்தி சுத்தி வேற எத்தனை ரூட் போட முடியும்", என்றாள் விஜி.

அனைவரும் அவரவர் வீட்டுக்குப் போய் சேர்ந்தனர். அரைமணி நேரம் கழித்து விஜி ஆனந்துக்கு போன் செய்தாள். "டேய் - கொஞ்சம் கேப் குடுத்து வரமாட்டீங்க. இன்னும் கொஞ்சம் நேரம் ஆகியிருந்தா என் மேல சந்தேகம் வந்திருக்கும். ஆமா யாரோட ஐடியா, எங்களுக்கு முன்னாடி போறது?". எல்லாம் அந்த சைக்காலஜி மன்னன் கண்ணனோட ஐடியாதான். பின்னாடி போனாதானே சந்தேகம் வரும். அதனாலதான் முன்னாடி போனோம். இனிமே அடுத்தமுறையும் உங்க காலண்டர் ஷேர் பண்ணு, பிளீஸ் - நல்லா ஒர்க் அவுட் ஆகுது", என்று சிரித்தான் ஆனந்த்.

எனது பார்வையில் அமெரிக்கா

(நொளம்பூர் - கண்ணன்)

எனது அன்பிற்கினிய கதம்பம் இதழின் வாசகர்களுக்கு அன்பு வணக்கங்கள். எனது கவனத்தை ஈர்த்த அடுத்த விஷயம் அமெரிக்காவில் மருத்துவ வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றித்தான். எனது மகன் தினமும் தன் நண்பர்களோடு கைப்பந்து விளையாடுவான். அவ்வாறு அவன் ஒரு நாள் விளையாடும் போது எதிர்ப்பக்கத்திலிருந்து ஒருவர் வேகமாக பந்தினைக் கட் அடித்திட இவன் நேராகத் தடுத்த போது கைவிரல்களில் அடிபட்ட காரணத்தால் வலி அதிகமானது. நான் என் மகனிடம் உடனே ஆர்த்தோ மருத்துவரிடம் செல்வோமா என்றேன். அதற்கு அவன் இந்தியாவைப் போன்று உடனடியாக இங்கே மருத்துவரிடம் முன்பதிவு செய்யமுடியாது. அடுத்த வாரந்தான் இந்த மருத்துவர் முன்பதிவு இருக்கிறது. நான் பதிவு செய்துவிட்டேன் என்றான். சரி அதுவரை வீங்கிய விரல்களின் வலி குறைய பார்மசியில் சொல்லி மாத்திரை போடு என்றேன். அதற்கு அவன் அமெரிக்காவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் எழுதிக் கொடுத்த சீட்டினைக் காண்பித்தால் தான் பார்மசியில் மருந்து கொடுப்பார்கள் என்றான். எனக்கோ ஆச்சரியம். மருந்து வாங்க இவ்வளவு சிரமமா என்று எண்ணிய நான் "நல்ல வேளை கடவுள் கருணையால் எங்கள் உடம்புக்கு எதுவும் ஆகவில்லை என்று என்னைத் தேற்றிக் கொண்டேன். அதற்கு என் மகன் இந்த கடுமையான விதிமுறைகள் இருப்பது நமக்கு நல்லது தான். நம்மூரில் டாக்டரிடம் செல்லாமலேயே காய்ச்சல், சளி, இருமல், அஜீரணம், வயிற்றுவலி ஆகியவற்றிற்கு மருந்துக்கடை ஊழியரிடம் சொன்னால் போதும். அவரே டாக்டராக மாறி பீஸ் எதுவும் வாங்காமல் மருந்து, மாத்திரைக்கான மாத்திரை மட்டும் வாங்கிக் கொள்வார். நமது மக்களும் அவற்றை ஆர்வத்துடன் வாங்கிச் சாப்பிட்டு சில சமயங்களில் அந்த மருந்துகளால் குணமடைவார்கள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

நம் உடலுக்கு ஒவ்வாமல் போய், வந்த நோய் அதிகமாகி நோயாளியின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் சம்பவங்கள் பல அங்கே நடந்துள்ளன. இங்கே இவ்வளவு கடுமையான விதி முறைகள் இருப்பதன் காரணம் "மக்களின் உயிர் மீது அரசுக்கு உள்ள அக்கறைதான். முதலில் நமக்கு கொஞ்சம் கடினமாகத் தெரியும். பழகிவிட்டால் இதன் அருமை நமக்கு புரியும்" என்றான்.

மேலும் எங்கள் நாட்டில் ஒரு சிறப்பு மருத்துவரிடம் முன்பதிவு செய்துவிட்டு நம்மால் அன்றைய தினம் போகமுடியவில்லையென்றால் நாம் ஆஸ்பத்திரிக்கு தொலைபேசிமூலம் தெரிவிப்போம். பல நேரங்களில் பேசாமல் இருந்து விடுவோம். ஆஸ்பத்திரிக்கு தாமதமாகப் போனாலும் "Sorry" என்று சொல்வதுடன் முடிந்து விடும். இங்கு அந்தமாதிரி செய்ய முடியாது. ஒருமுறை எனது-உவயது பேரனுக்கு தடுப்பூசி போடுவதற்காக ஒரு குழந்தை மருத்துவரிடம் முன்பதிவு செய்திருந்தார்கள். குழந்தை செல்லும் போது வழியில் இயற்கை உபாதை கழித்துவிட்டதால் அதற்காக 15 நிமிடங்கள் தாமதமாக சென்றுவிட்டனர். தடுப்பூசி போட்டு முடித்தவுடன் அதன் ~~இல்~~ பில் வரும்போது தாமத வருகைக்காக 25 டாலர் அதிகம் போட்டிருந்தார்கள். உடனே இவர்கள் ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் சென்று உரிய காரணத்தைச் சொல்லிவிட்டு, மேலும் இனிமேல் சற்று முன்னதாகவே வந்து விடுகிறோம் என்று சொல்லி இனி இதுபோல் நடக்காது பார்த்துக் கொள்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அதன் விளைவு - அடுத்த முறை தடுப்பூசி போடுகையில் அந்த அதிகப் படியாகப் போட்ட தொகையைத் திருப்பி கொடுத்து விட்டார்களாம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

இந்த நடைமுறை முதலில் எனக்கு சற்று கடுமையானதாகத் தெரிந்தது. சற்று யோசித்துப் பார்த்த பின் என் கணிப்பு மாறியது. விதிகளை மீறாமல் நடக்கச் சொல்வது தவறல்லவே? குடிமக்களை நல்வழிப்படுத்தும் கடமை அரசுக்கு உண்டல்லவா! அதற்காக அமெரிக்க அரசுக்கு எனது அருமைப் பாராட்டுக்கள்.

17-09-2023 அன்று அமுதேவின் 80-வது பிறந்தநாள். அன்று அனைவரும் குடும்பத்துடன் கொலம்பியாவைச் சேர்ந்த, வாஷிங்டன் D.C-ன் அருகே உள்ள ஸ்ரீ சிவா-விஷ்ணு கோவிலுக்குச் சென்றிருந்தோம். ஊருக்கு சற்று தொலைவில் தமிழகத்திலுள்ள சில பெரிய கோவில்களுக்கு இணையாக மிகவும் விசாலமான நிலப்பரப்பில் அழகிய, நேர்த்தியான கலை நயத்தோடு கட்டப்பட்டுள்ளது இந்த திருக்கோவில். இந்த கோவிலில் வணங்குவோர் வேண்டும் வரங்களை வாரிக்கொடுக்கும் சிவன், பார்வதி, விநாயகர், மகாலட்சுமி, சரஸ்வதி, கிருஷ்ணன், சன்னதிகளை வணங்கி விட்டு பிரமாண்டமான அனந்த பத்மநாபன் சன்னதியை அடைந்து தரிசித்தோம். அடுத்துள்ள வைணவ சன்னதிகளை முடித்து விட்டு என் ஆருயிர் தெய்வமான முருகன் வள்ளி தெய்வயானை யுடன் நின்ற கோலத்தில் காட்சி தரும் அழகைக் காணக் கண்கள் கோடி வேண்டும். வரம் கொடுக்கும் வடிவேலனை மனமுருக வணங்கி விட்டு கோவிலில் கிடைத்த பிரசாத வகைகளைச் சுவைத்துவிட்டு கோவிலை வலம் வந்தோம். அனைத்து சிலைகளும் அர்ச்சகர்களால் பக்திசிரத்தையுடன் அலங்காரம் செய்திருந்த நேர்த்தியைப் பாராட்ட வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

நாங்கள் அடுத்தபடியாக ஸ்ரீ சிவா விஷ்ணு கோவிலில் இருந்து இரண்டு மைல்கள் தொலைவில் இருக்கும் வட அமெரிக்கா முருகன் கோவிலில் நுழைந்தோம். ஒரு கோவில் என்ற எண்ணத்தில் நுழைந்த எங்களுக்கு முருகனின் ஆறுபடை வீட்டினையும் தரிசனம் செய்யும் பாக்கியம் கிட்டியது. கோவிலில் நடு நாயகமாக முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் கல்யாண கோலத்தில் கண் கொள்ளாக் காட்சியுடன் அருளாசி வழங்குகிறார். முருகன் சன்னதியில் நான் நின்றது தான் தெரியும். பத்து நிமிடங்கள் அவன் அழகைக் கண்டு மகிழ்ந்து அவனோடு கலந்துவிட்டேன் என்று தான் சொல்லவேண்டும். அனைவரின் சிக்கல்களையும் தீர்த்து வைக்கும் சிங்கார வேலனாய் காட்சி தருகிறார். மிகவும் தூய்மையாக பக்திமணம் கமழும் வகையில் கோவில் அமைந்திருந்தது. கோவில் அர்ச்சகர்கள் கடமைக்கு பணி புரியாமல், கடமையை புனிதப் பணியாக செய்கின்றனர். கோவிலை விட்டு கிளம்ப மனமில்லாமல், அரை மனத்துடன் முருகப் பெருமானிடமிருந்து விடைபெற்று வீட்டினை வந்தடைந்தோம்.

மீண்டும் அடுத்த மாதம் இதழில் சந்திப்போம்

இவண்

நொளம்பூர் கண்ணன்

மீனாவுடன் மிக்சர்

சவாலே சமாளி!

{நவராத்திரி நினைவுகள் 2023}

-மீனா சங்கரன்

நானும் பல வருடமாக கண்ணில் படும் கணினி நிபுணர்களை எல்லாம் கெஞ்சிப் பார்த்து சலித்து விட்டேன். பகல் இரவு அப்படீன்னு பாரபட்சம் பார்க்காமல் எந்நேரமும் கணினியோடு குடுத்தனம் பண்ணும் சக இந்தியர்களில் ஒருவர் கூட என் வேண்டுகோளை காதில் வாங்காமல் போனது வருந்தத் தக்க விஷயம். இந்த உலகத்தில் இரக்கம், தயை, பச்சாதாபம் எல்லாம், தலிபான் ஆட்சியில் பெண் சுதந்திரம் போல் கடத்தப்பட்டது எப்போது? நவராத்திரி சீசனில் இரிச்மண்டு நகரில் பெண்கள் படும் பாட்டை பார்த்து இனி அந்த கொலுவில் இருக்கும் கடவுளே மனமிரங்கி வந்து ஒரு **app** ஐ எழுதினால் தான் எங்களுக்கு விடிவு வரும் போல இருக்கு.

நாங்கள் பெண்கள். பெரும் ஆற்றல் மிக்கவர்கள் தான். ஒத்துக்கறேன். வாழ்க்கை எங்கள் பக்கமாக விட்டெறியும் எந்த பந்தையும் அஞ்சாமல் நேர்கொண்டு அசராமல் சிக்ஸர் அடிக்கும் மன உறுதி கொண்டவர்கள் தான். இல்லைன்னு சொல்லலை. இருந்தாலும் நவராத்திரி சீசனில் வந்து எங்கள் முன் குவியும் சவால்களில் நாங்கள் ஆடிப்போவது என்னவோ மறுக்க முடியாத ஒரு உண்மை.

அப்படி என்ன மீனா உங்களுக்கு பெரிய சவால்கள் னு நீங்க கேட்பீங்கன்னு தெரிஞ்சு தான் நான் ரெடியா **list** போட்டு கொண்டு வந்திருக்கேன். மேலே படிங்க.

சவால் #1:



வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே போகும் கொலு அழைப்புகள். **Evite, whatsapp, text, email** அப்படீன்னு பல திசைகளிலிருந்து வந்து குவியும் இந்த அன்பான அழைப்புகளை வர வர சமாளிக்கவே முடியலை. யார் யார் என்னென்னிக்கு கொலுவுக்கு கூப்பிட்டு இருக்காங்க? சுதா வீட்டில் செவ்வாய் கிழமை கூப்பிட்டால் சுதாவின் தெரு முனையில் இருக்கும் கீதாவும் அன்னிக்கே கூப்பிட கூடாதா? அவங்க தெரு ரொம்ப அழகா தான் இருக்கு. நான் மறுக்கலை. ஆனால் அதுக்குன்னு பெட்ரோல் விக்கற விலைக்கு ஒரே தெருவுக்கு எத்தனை முறை வண்டியை விட முடியும், சொல்லுங்க?

இன்னொரு ரொம்ப முக்கியமான புள்ளி விவரம் இதோ. எத்தனை மணிக்கு பிறகு அவரவர் கொலுவுக்கு கூப்பிட்டு இருக்காங்க? ஏன்னா அந்த வீட்டம்மா சுண்டலை தாளிப்பதற்கு முன்னாடி நம்ம போய் நின்னா நல்லா இருக்காது பாருங்க. அப்புறம் ஒன்பது நாட்கள் தானே நவராத்திரி விழா? சராசரியாக ஒரு வீடு மூணு மணி நேரம் அவங்க கொலுக்கதவை திறக்கையில், **optimal** ரூட் மேப் இல்லாமல் எப்படிங்க ஐம்பதுக்கும் மேலே உள்ள கொலு வீடுகளுக்கு போக முடியும்? விறு விறுன்னு நடந்து பாருங்களேன்னு விவரமில்லாமல் நீங்கள் சொன்னீங்கன்னா அடுத்த கொலுவில் உங்களுக்கு சுண்டல் **cut.**

சவால் #2:

கடந்த சில வருடங்களாக நவராத்திரியில் ஒவ்வொரு நாளும் எந்த நிறத்தில் புடவை கட்டணும்னு யாரோ ரூம் போட்டு யோசிச்சு பட்டியல் போட்டு வாட்ஸாப்பில் சகட்டு மேனிக்கு பரப்பி விடறாங்க. தப்பில்லை. ஒரு விதமா உதவி தான். ஏன்னா என்ன புடவை உடுத்தணும்னு நாம மண்டையை உடைத்து கொள்ள வேண்டாம் பாருங்க. பின்ன என்னதுக்கு இப்படி புலம்பணும்னு நீங்க கேக்கறீங்க. நியாயமான கேள்வி.

என்னோட குறை இது தான். பட்டியல் போடறவங்க சும்மா நீலம், பச்சை, சிவப்பு அப்படீன்னு சொன்னா பத்தாதா? மயில் பச்சை, ராயல் நீலம், காஷ்மீர் மிளகாய் சிவப்பு., கூவம் நதி கருப்பு.....இப்படி எல்லாம் நுணுக்கமா பட்டியல் போடுவது அவசியமா? ஒரு நாள் கிளம்பும் அவசரத்தில் (ராயல் ப்ளூ தேதியில்) நான் ஒரு பிங்க் கலர் புடவையில் ஏதோ ஒரு ப்ளூ பார்டர் புடவை கட்டி கொண்டு போனேன். அவ்வளவு தான். அன்னிக்கு ஊர் மக்கள் என்னை அவங்க மூக்கு கண்ணாடியை கீழே தள்ளி பார்த்த பார்வையில் ரொம்ப **shame shame** ஆ போச்சு. இந்த சோதனை எங்களுக்கு தேவையா?

சவால் #3:

நம்ப பாரம்பரியத்துக்கு ஒரு குறையில்லாமல் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் கொண்டு வரும் ஆப்பிளும் ஆரஞ்சு பழ மூட்டைகளும் தான் எங்களோட அடுத்த சவால். ஒவ்வொரு வருஷமும் இந்த ஒன்பது நாளும் அக்கம் பக்கத்தில் உள்ள கடைகளில் ஒரு பழம் கூட விட்டு வைக்காமல் நம்மூர் பெண்கள் வழித்து கொண்டு போவதாக ஊரில் பேச்சு. நானே எங்க வீட்டு கொலுவுக்கு வரவங்களுக்கு கொடுக்க போன வாரம் **200** பழங்கள் வாங்கினேன்னா பாருங்களேன். வீட்டுக்கு வந்தவங்களுக்கு தாம்பூலத்தில் ஆளுக்கு ரெண்டு பழம் வைத்து கொடுத்து ஒரு வழியா எங்க வீட்டு பழ மலையை மடுவாக மாத்தி விட்டு நிமிர்ந்தால், வந்தவங்க அன்போடு எங்கள் கொலுவுக்கு கொண்டு வந்து குமித்திருந்த ஆப்பிளும் ஆரஞ்சும் வாழைப்பழமும் என்னை பார்த்து கெக்கலி கொட்டிச்சு. எவ்வளவு தான் நாங்களும் ஜூஸ் பண்ணி குடிக்க முடியும், சொல்லுங்க? ஆப்பிள் ரசம், ஆப்பிள் தொக்கு, ஆப்பிள் ஜேம், வாழைப்பழ அப்பம், வாழைப்பழ பிரெட்......இதுக்கு மேல என்ன பண்ண முடியும்? வேறே சமையல் குறிப்பு தெரிஞ்சா சொல்லுங்களேன் ப்ளீஸ்.

சவால் #4:

"மீனா, எங்க கொலுவில் இந்த வருடம் எந்த பொம்மை புதுசுன்னு சொல்லுங்க பார்க்கலாம்?" - இப்படி அதிரடியாக கிளம்பும் திடீர் தேர்வுகள். ஆவலோடு என் முகத்தை பார்த்து இந்த கேள்வியை கேட்கும் இரிச்மண்டு பெண்களை பார்த்தால் எனக்கு என்னவோ பாவமாக தான் இருக்கும். இந்த மாதிரி தேர்வில் என்னிக்குமே நான் பாசானதாக சரித்திரம் இல்லை. எனக்கு மட்டும் சொல்லணும்னு ஆசை இருக்காதா? ஆனால் பாருங்க, எங்க வீட்டு கொலுவில் என்ன பொம்மை இருக்குன்னு எனக்கே கொஞ்சம் சுமாரா தான் நியாபகம் இருக்கும் போது, போன வருடம் உங்க வீட்டில் ஒரு ஐந்து நிமிஷம் நான் பார்த்த பொம்மை எனக்கு நினைவிருக்கும்னு நீங்க எப்படி எதிர்பார்க்கறீங்க? இதுக்காக எல்லாம் கோவிச்சுக்கிட்டு என்னை போல மறதி உள்ளவங்களுக்கு சுண்டல் தராம மட்டும் இருந்தீங்கன்னா அது ரொம்ப தப்பு. தேங்காய் மாங்காய் போட்ட அமர்க்களமான சுண்டல் இல்லை அப்படீன்னாலும் பரவாயில்லை. ஒரு சுமார் சுண்டலையாவது ஆறுதல் பரிசாக கொடுத்துடுங்க, சரியா?

என் நவராத்திரி சவால் பட்டியல் இன்னும் ரொம்பவே நீளம். அதனால் இன்னிக்கு இதோடு நிறுத்திக் கொண்டு, ஊரெல்லாம் சுண்டல் மணம் கமழும் இந்த நவராத்திரி சீசனில் அனைவருக்கும் என் நவராத்திரி வாழ்த்துக்கள் சொல்லி விடை பெறுகிறேன்.

என்னைக் கவர்ந்த சிந்தனைகள்

((நொளம்பூர் - கண்ணன்))

1. உங்கள் பேச்சுத்திறமையை பெற்றோரிடம் காட்டாதீர்கள். ஏனெனில் உங்களுக்கு பேசக் கற்றுக் கொடுத்தவர்களே பெற்றோர்கள் தான்.
2. மற்றவர் பார்வையில் அழகாய் வாழ்வதைவிட, மற்றவர் மனதில் அன்பாய் வாழ்வதே சிறப்பு.
3. வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம் தான். கடமையைச் செய்தால் வெற்றி. கடமைக்கு செய்தால் தோல்வி.
4. 100 வருடங்கள் வாழும் மனிதன் அழுதுகொண்டே பிறக்கிறான். ஆனால் சில மணி நேரம் வாழும் "பூக்கள்" சிரித்துக் கொண்டே பூக்கின்றன.
5. வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா! உங்கள் உறவினர்களிடம் மட்டும் உதவி கேட்காதீர்கள்.
6. உன் தவறு உன் மனசாட்சியினால் உடனே கண்டிக்கப் படுமானால் நீயே உலகில் உயர்ந்தவன்.
7. எந்த வடிவம் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளும் தண்ணீரைப் போல் எந்த சூழ்நிலையிலும் வாழப் பழகிக் கொண்டால் வாழ்க்கை என்றும் சொர்க்கமே.

இவண்,

நொளம்பூர் - கண்ணன்

முப்பெரும் விழா

நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை
கீழ்க்காணும் சுட்டியில் காணலாம்.

Click here

venmo

Scan to pay

Diwali Palagaram

Annai Unavagam
அன்னை

Snack Point
Mirchi Bajji – 5$
Pani puri – 5$

ZONE
B

ICHMOND
TAMIL SANGAM

POCAHONTAS MS

POCAHONTAS MS

IGAM

TAMIL SANGAM

STARS

ICHMOND
TAMIL SANGAM

ICHMOND

ICHMOND

CHMOND

நங்கை

மக்கள் கருத்து

it was indeed a great initiative by RTS in promoting local entrepreneurs.. Very nicely organized and a great platform to showcase our work. Had an overwhelming response yesterday and thanks to RTS for organizing this.. 🙏🙏

First of all , a big thank you to RTS team for organizing this beautiful event and Nangai initiative.
This is my first stall experience. It was a wonderful experience. Facing customers in real time by selling our own products is absolutely a bliss.
We had great response for the traditional sweets like til laddu, urad dal kali and kavuni arisi sweet.

Thank you again. 🥰🙏🏻

A big heart full thanks to RTS for conducting this event and bring out the strength and power of the women. This is my first time having a stall and even the kids enjoyed standing in the stall and selling the products. Had a good response from the wonderful Richmond people. This makes me to do more. Once again a thanks to RTS members for making this organized event. Hope the team continues to do more in future.🙏

Thanks a lot for giving us all opportunity to forecast our passion and interest to our community..
Your team work, inspiration, pro-active and guided norms were driving force for this huge success of this event.
Our first time stall experience was wonderful and learned a lot..
Looking forward to join these exciting events .
- Sharmila Shanmugham

Hearty Thanks RTS 🙏 for giving us a platform to expose our products to the customers. It was an amazing experience to communicate with the customers. We were overwhelmed with the response given by our RTS community. Thanks again RTS for encouraging startup entrepreneurs. 🙏🥰

Kudos to everyone who conducted this event. Thanks for encouraging all the women entrepreneurs. It was a great experience for the start ups like me to interact with the larger crowd ..

Hello RTS....
I thank from bottom of my heart for giving us this platform...I totally agree with everyone. They expressed everything that I want to😃😃
Everything went so well & got a huge respond for our stall....
Kudos to all your hard work, planning & team work 👏

I'd like to start by expressing my sincere gratitude to the RTS team for organizing this event. My stall has been a huge success, and I'm so excited to participate in future events like this.

I'd also like to thank the admins for their patience and responsiveness in answering all of our questions. You've made this event a pleasure for everyone involved.

Thank you again, RTS team and admins! 💐😊

Good morning all! I echo the comments shared by our friends! It was a great event , well organized and the crowd was awesome! Great job by the entire RTS team and thanks a lot for conceiving this idea to encourage women and executing it! Thank you again! 🙏🙏

Starting with thank u and kudos to the whole team for initiating and well organizing this event it's so great to meet lot of people and embracing our creativity and talents so happy to be part of it and hope for lot more support and events👍🏻🙏🏻

We would like to extend our sincere appreciation for the incredible opportunity you provided to women entrepreneurs like us to showcase our small businesses during the adult cultural event. Your efforts have created a platform that empowers women in business, and we are grateful to have been a part of it.

Thank you for your support and for making this event a memorable and empowering experience🙏

Kudos and a big thanks to the RTS team for yet another successful event. Me along with my other entrepreneurial ladies are super grateful for this platform. Loved interacting with all the people and was floored by their encouragement. Will look forward to more such events in the future🙏🏻🙏🏻🙏🏻

Huge thanks to RTS crew, Thank you for initiating this event and providing us a memorable experience. This was my first stall experience and had a good response. Thanks again for the great opportunity and encouragement..

கொலு

ராதா சிவகுமாரின் கொலு சுற்றுப்பயணம்

Special Thanks To
Our Sponsors
United
Real Estate
Ravi Gutta
804-991-0269
RaviGutta09@gmail.com
Find Your Freedom
Maharajah
Indian Asian Groceries &
Halal Meat
Physical Therapy
Sports Rehab
Aquatic Therapy
RVA
Faith Devapalan
BSM, MA, MED, EDS, EDD
804-300-3106
Piano | Guitar | Vocal | Teacher
AEKTA CHAWLA
UNMATCHED SERVICE
zriliant
KUMON
KUMON MATH & READING CENTERS
Kala Ramesh
Indian Pastry House
Indian Fast Food & Bakery Cafe
Ph: 804-332-5751
www.IndianPastryHouse.com
Suvai
Delicious
Idly & Dosa
Batter
Fresh
Homemade
(804)931-1265
(804)862-1323
johnson@fathomrealty.com
www.homeswithjohnson.com
REALTOR®
FATHOM
SHORT PUMP HOME & REAL ESTATE
KUMAR RAMANATHAN
LICENSED REALTOR
MODERN
INDIAN
Cafe
DESI BITES
aha
INDIAN KITCHEN
Aha
Indian
Kitchen
www.Richmondtamilsangam.org


Tech Gurukul
Education Changes Lives
www.techgurukulusa.com
Python • Java • AWS • Data Science
The Peacock Montessori
Big Steps For Small Feet
info@thepeacockmontessori.com
5404 Bennett Ln, Glen Allen, VA
searchblox
RAMS PAAN SHOP
Call
8047545543
Party Orders and
Individual orders accepted
With Best Compliments From
Apsaras Arts Dance Group
Director and Choreographer
Uma Chetty
umachetty@gmail.com
Vishali Kachiraju, CPA
Richmond, VA
AKSHATHA
AKSHATHA
www.akshathaonline.com | 804-299-9783
Add your
Business
Richmond
Tamil Sangam

சிவசக்தி அறிவுக்கண்ணன்

நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

நன்றி!

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின், சந்தானம், சுபா பாபு , ஸ்ரீ லதா, இளமாறன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் எங்கள் செய்திமடலுக்கு ஆதரவளித்த அனைத்து RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.

Feedback

இந்த மாத செய்திமடல் பற்றி கருத்து தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

Click Here!

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

RICHMOND TAMIL SANGAM

ஒற்றுமையே உயர்வு

website:

www.richmondtamilsangam.com

contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org